**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 216/2023**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 20.01.2026.**

| | |
|---|---|
| **Name : இளந்தேவன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1) வெள்ளை தாளில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் எழுதி தட்டச்சு செய்த பிறகு கையொப்பம் செய்தேன். கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்றால் கெம்ப்ளாஸ்ட் காம்போன்டு, ஜவுளி கடை, சிக்கன் கடை இருந்ததை படமாக வரைந்தார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை. எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் விபத்து நடந்த இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன்.

2) போலீசார் வரும் போது விபத்து நடந்த இடத்தில் கூட்டமாக இருந்ததா என்றால் நான் மற்றும் மற்றவர்கள் இருந்தார்கள். யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இறந்தவர் எனக்கு உறவினரா என்றால் தெரிந்தவர் ஆவார். போலீசார் விசாரித்த போது தெரிந்தவர் என்று சொன்னேனா என்றால் அது பற்றி சொல்லவில்லை.

3) நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் உறவினர் என்று முதல் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது தெரிந்தவர் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவயிடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே தட்டச்சு செய்யப்பட்ட தாளில் கையொப்பம்

செய்தேன் என்றால் ஆமாம். என் முன்னிலையில் தட்டச்சு செய்யவில்லை என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**